பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

02 07 2025 **WEDNESDAY** 6 30 **PM**

வணக்கம்-மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டிற்கான திட்டங்களை செயல்படுத்துவதில் தொழில்நுட்பம் பெரும் மாற்றத்தை கொண்டுவந்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

- பாதுகாப்பு தளவாடங்கள் ஏற்றுமதி அடுத்த 4 ஆண்டுகளுக்குள் 50 ஆயிரம் கோடி ரூபாயை எட்டும் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

- பொது இடங்களில் அனுமதியின்றி வைக்கப்பட்டுள்ள கொடிக்கம்பங்களை முழுமையாக அகற்றாத மாவட்ட ஆட்சியர்கள் நேரில் ஆஜராக உத்தரவிட நேரிடும் என்று சென்னை உயர்நீதிமன்றம் மீண்டும் எச்சரித்துள்ளது

- காவல்துறையினரின் விசாரணை மனித உரிமைகளை மீறாத வகையில் நடைபெற வேண்டியதன் அவசியத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது.

- மலேசிய ஜூனியர் பேட்மிண்டன் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் **Disha Santosh**. காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

>>>>>>>>><<<<<<<<<<

மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டிற்கான திட்டங்களை செயல்படுத்துவதில் தொழில்நுட்பம் பெரும் மாற்றத்தை கொண்டுவந்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், ஊட்டச்சத்து கண்காணிப்பு, பயனாளிகளின் வங்கிக் கணக்குகளுக்கு நேரடியாக பணப்பரிமாற்றம், புகார்களை களைவதற்கென தனி ஏற்பாடு போன்றவை இதில் அடங்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பாக, மத்திய அமைச்சர் திருமதி. அன்னபூர்ணா தேவி எழுதிய கட்டுரையையும் பிரதமர் பகிர்ந்துள்ளார்.

>>>>>>>>><<<<<<<<<<

பாதுகாப்பு தளவாடங்கள் ஏற்றுமதி அடுத்த 4 ஆண்டுகளுக்குள் 50 ஆயிரம் கோடி ரூபாயை எட்டும் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

இன்று பாட்னாவில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், பாதுகாப்பு தளவாடங்களை இறக்குமதி செய்யும் நிலையிலிருந்து தற்போது ஏற்றுமதி செய்யும் அளவுக்கு உயர்ந்துள்ளதாக கூறினார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி மேற்கொண்ட நடவடிக்கைகளே இதற்கு காரணம் என்றும அவர் தெரிவித்தார்.

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பாதுகாப்பு தளவாடங்கள் தற்போது 100 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதாக அவர் கூறினார்.

தீவிரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளில், ஆப்பரேஷன் சிந்தூர் மிகப் பெரிய வெற்றியை பெற்றிருப்பதாகவும் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

>>>>>>>>><<<<<<<<<<

அரசு பள்ளிகளில் தொழில்நுட்ப ஆய்வகங்கள் அமைப்பதற்காக 160 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி கூறியுள்ளார்.

இன்று தஞ்சாவூரில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், 2 ஆயிரம் பள்ளிகளில் இந்த ஆய்வகங்கள் ஏற்படுத்தப்படவுள்ளதாக தெரிவித்தார்.

மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் மனநல ஆலோசனைகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

(சவுண்ட் பைட் அன்பில் மகேஸ் 33 செகண்ட்ஸ்)

>>>>>>>>><<<<<<<<<<

பொது இடங்களில் அனுமதியின்றி வைக்கப்பட்டுள்ள கொடிக்கம்பங்களை முழுமையாக அகற்றாத மாவட்ட ஆட்சியர்கள் நேரில் ஆஜராக உத்தரவிட நேரிடும் என்று சென்னை உயர்நீதிமன்றம் மீண்டும் எச்சரித்துள்ளது.

இதுதொடர்பான வழக்கு நீதிபதி திரு. இளந்திரையன் முன்பாக இன்று மீண்டும் விசாரணைக்கு வந்தபோது, தமிழக அரசின் சார்பில் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

இதில் 19 மாவட்டங்களில் கொடிக்கம்பங்கள் 100 சதவீதம் அகற்றப்பட்டதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

10க்கும் மேற்பட்ட மாவட்டங்களில் 90 சதவீதமும், சென்னையில் 39 சதவீதமும் கொடிக்கம்பங்கள் அகற்றப்பட்டதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனையடுத்து, கொடிக்கம்பங்களை அகற்றுமாறு பிறப்பித்த உத்தரவை நிறைவேற்றுவதில் என்ன சிக்கல் இருக்கிறது என்று கேள்வி எழுப்பிய நீதிபதி, வழக்கு விசாரணையை 24ஆம் தேதிக்கு ஒத்தி வைத்தார்.

>>>>>>>>>><<<<<<<<<<

காவல்துறையினரின் விசாரணை மனித உரிமைகளை மீறாத வகையில் நடைபெற வேண்டியதன் அவசியத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் திரு. முத்தரசன் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், கடந்த சில ஆண்டுகளாக 25 பேர் காவல் விசாரணையின் போது கொல்லப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில், சிவகங்கை மாவட்டம், திருப்புவனத்தில் இளைஞர் ஒருவர் காவல்துறை விசாரணையின் போது சித்ரவதை செயய்யப்பட்டு உயிரிழந்ததை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுபோன்ற சம்பவங்கள், காவல்துறையின் விசாரணை முறையை மாற்றியமைக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துவதாகவும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

இதனை கருத்தில் கொண்டு, இதற்கேற்ப காவல்துறை கொள்கையை மாற்றியமையக்க வேண்டும் என்றும் திரு. முத்தரசன் கோரியுள்ளார்.

>>>>>>>>>><<<<<<<<<<

காவல்துறைக்கு எதிரான நீதிமன்ற உத்தரவுகளை காவல்துறை பாடநூலில் சேர்க்க வேண்டும் என்று பாமக நிறுவனர் மருத்துவர் ச.ராமதாசு வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், சிவகங்கை மாவட்டம், திருப்புவனத்தில் இளைஞர் ஒருவர் காவல்துறை விசாரணை முறையால் தான் உயரிழந்தார் என்பதை அனைத்து தரப்பும் உறுதி செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

முதல்கட்டமாக, காவலர் பயிற்சிக்கான பாடநூலில் நீதிபதிகள் எஸ்.எம். சுப்பிரமணியம், மரியா க்ளாட் பிறப்பித்த உத்தரவை காவல்துறை பாடத்தில் சேர்க்க வேண்டும் என்றும் திரு. ராமதாசு அந்த அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

>>>>>>>>>><<<<<<<<<<

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த ஐந்து தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார். (சவுண்ட்பைட் – செந்தாமரை 35 செகண்ட்ஸ்)

இதற்கிடையே, சென்னை மற்றும் புறநகர் பகுதிகளிலும், தருமபுரி மாவட்டத்திலும் இன்று மாலை பரவலாக மழை பெய்தது.

இந்நிலையில், குற்றால அருவிகளில் தண்ணீர் கொட்டுவதால், சீசன் களைகட்டியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - செந்தில் 39 செகண்ட்ஸ்)

>>>>>>>>><<<<<<<<<<

மாவட்டச் செய்திகள்

மதுரை மாவட்ட வளர்ச்சி மற்றும் கண்காணிப்புக் குழுக் கூட்டம், மாநில அமைச்சர் திரு. மூர்த்தி தலைமையில் இன்று நடைபெற்றது.

>>>>>>>>><<<<<<<<<<

நாமக்கல் மாவட்டம், மோகனூரில் உள்ள அருள்மிகு கல்யாண பிரச்சன்ன வெங்கட்ரமன பெருமாள் ஆலயத்தின் ஆனி தேரோட்டம் இன்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.

>>>>>>>>><<<<<<<<<<

திருவள்ளூர் மாவட்டத்தில் கால்நடைகளுக்கான கோமாரி நோய் தடுப்பு முகாமினை ஆட்சியர் திரு. பிரதாப் இன்று தொடங்கி வைத்தார்.

>>>>>>>>><<<<<<<<<<

தூத்துக்குடி மாநகராட்சியில் புதிதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளில் தினசரி குடிநீர் விநியோகம் செய்யும் பணிகள் 90 சதவீதம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக மேயர் திரு. ஜெகன் பெரியசாமி கூறியுள்ளார்.

>>>>>>>>><<<<<<<<<<

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் காவல்துறை சார்பில் மக்கள் குறைதீர் நாள் கூட்டம் காவல்துறை கண்காணிப்பாளர் திரு. ரஜத் சதுர்வேதி தலைமையில் இன்று நடைபெற்றது.

>>>>>>>>><<<<<<<<<<

சென்னை சென்ட்ரல் - விஜயவடா இடையேயான பினாக்கினி எக்ஸ்பிரஸ் நாளையும், வரும் 10 மற்றும் 17ஆம் தேதிகளிலும் பிற்பகல் மணி 2.05க்கு பதிலாக 3.35-க்கு புறப்பட்டு செல்லும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

>>>>>>>>><<<<<<<<<<

தெற்கு ரயில்வேயின் முதன்மை வர்த்தக மேலாளராக திரு வினயன் பொறுப்பேற்றுக்கொண்டார்.

>>>>>>>>><<<<<<<<<<

தாம்பரம் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் வகையில் 26 சிறப்பு போக்குவரத்து வாகனங்களின் சேவையை காவல்துறை ஆணையர் திரு. அபின் தினேஷ் மோடக் இன்று தொடங்கி வைத்தார்.

>>>>>>>>><<<<<<<<<<

விளையாட்டுச் செய்திகள்

மலேசிய ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Dhyan Santosh – Disha Santosh** இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

19 வயதுக்குட்பட்டோருக்கான கலப்பு இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 22-20, 25-23 என்ற செட்கணக்கில் அஜர்பைஜானின் **Ulvi Huseynov – Leyla Jamalzade** இணையை வென்றது.

மகளிர் ஒற்றையர் பிரிவில் **Disha Santosh 2**1-16, 21-9 என்ற செட்கணக்கில் மலேசியாவின் **Weng Yan Lee-**யை வென்று காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறினார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் **Tankara Gnana Dattu Talasila-** வும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளார்.

>>>>>>>>><<<<<<<<<<

இந்தியா - இங்கிலாந்து இடையேயான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி இன்று தொடங்கியது.

பர்மிங்காமில் நடைபெற்று வரும் இப்போட்டியில் டாஸ் வென்ற இங்கிலாந்து முதலில் பந்துவீச தீர்மானித்தது.

இதனையடுத்து பேட் செய்து வரும் இந்தியா சற்றுமுன்வரை . . . விக்கெட் இழப்புக்கு . . . . ரன் எடுத்துள்ளது

>>>>>>>>>END<<<<<<<<<<